

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.05.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் புதிய துணைத் தலைவர் திருமதி செ.கனிமொழி பத்மநாபன், புதிய உறுப்பினர்கள் பூ.மூக்கையா, செ.ரமேஷ், ரெ.விஜயசங்கர், க.குருநாதன், தே.கண்ணன், பெ.தங்கவேல், கு.மகாலிங்கம், நா.சேகர், ஆர்.பி.மோகன், சி.சீனிவாசன், ஜி.கே.ராஜன், தி.அரிஷ்குமார் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி ஜி.லட்சுமி பிரியா, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மேலாண்மை இயக்குநர் கே.எஸ்.கந்தசாமி ஆகியோர் உள்ளனர்.

### அடிப்படை ஆதாரம் இல்லாமல் பேச்சு!

# பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை மீது அவதூறு வழக்கு!

## முதலமைச்சர் சார்பில் நீதிமன்றத்தில் மனு தாக்கல்!

சென்னை, மே 12 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலைக்கு எதிராக சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் அவதூறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சென்னை மாநகர குற்றவியல் வழக்கறிஞர் ஜி.தேவராஜன், முதலமைச்சர் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கடந்த மாதம் 14 ம்தேதி பத்திரிக்கையாளர் சந்திப்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு எதிராக எந்த ஒரு அடிப்படை ஆதாரமும் இல்லாமல் அவதூறான கருத்துக்களை வெளியிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்தக் கருத்துக்கள் பொய்யானது மட்டுமின்றி முதலமைச்சரின் நற்பெயருக்கும், புகழுக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்திவரும், முதலமைச்சருக்கு எதிராக எந்த ஒரு அடிப்படை ஆதாரமும் இல்லாமல் அண்ணாமலை குற்றச்சாட்டுகளை கூறியுள்ளதாக வழக்கறிஞர் ஜி.தேவராஜன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் இரண்டு லட்சம் மாணவிகள் பயன்பெறும் வகையில் புதுமைப் பெண் திட்டம், காலை உணவு திட்டம் என பல வேறு திட்டங்களை முதலமைச்சர் செயல்படுத்தி வருவதையும் சுட்டிக்காட்டி உள்ள வழக்கறிஞர், அண்ணாமலை மீது அவதூறு சட்டத்தின் கீழ் உரிய தண்டனை வழங்க உத்தரவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த மனு முதன்மை அமர்வு நீதிமன்ற கோடை விடுமுறை கால நீதிபதி உமாமகேஸ்வரி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, மனு மீதான விசாரணையை எட்டு வாரத்துக்கு நீதிபதி ஒத்தி வைத்தார்.

# மின்வாரிய ஊழியர்களுக்கு 6% ஊதிய உயர்வு!

## அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அறிவிப்பு!

சென்னை, மே 12-

மின்வாரிய ஊழியர்களுக்கு 6 சதவீத ஊதிய உயர்வு வழங்க மின்வாரிய ஊழியர்களுடன் நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதாக தமிழ்நாடு மின் துறை அமைச்சர் செந்தில்பாலாஜி கூறியுள்ளார்.

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு 01.12.2019 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு குறித்து சங்கங்களின் பிரதிநிதிகளுடன் இறுதி கட்ட பேச்சுவார்த்தை நடத்தினார்.

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு 01.12.2019 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு குறித்து தொழிற்சங்கங்கள், பொறியாளர் கழகம் மற்றும் பொறியாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் (10.05.2023) சென்னை தலைமை அலுவலகத்தில் இறுதிகட்ட பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு) ரா.மணிவண்ணன், இயக்குநர் (பகிர்மானம்) மா.சிவலிங்கராஜன், இயக்குநர் (நிதி) (பொ) மலர்விழி, வாரிய செயலாளர் ஆ. மணிக்கண்ணன், கூடுதல் ஆணையர் (தொழிலாளர் நலன்) எம். சாந்தி மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



இதன் இறுதி கட்டமாக தொழிற்சங்க நிர்வாகிகள், பொறியாளர்கள் சங்கங்கள் மற்றும் இதர சங்க நிர்வாகிகள் 10.05.2023ம் நாளன்று மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுடன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முன்னிலையில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இறுதி கட்ட பேச்சு வார்த்தையில் சுமூக முடிவு எட்டப்பட்டது.

பின்னர், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

01.12.2019 முதல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பணிபுரியக்கூடிய ஊழியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய உயர்வு பேச்சுவார்த்தைக்கான குழு கடந்த ஆட்சியில் 07.12.2019ல் தான் அமைக்கப்பட்டது. அதன் பிறகு அந்த கூட்டம் தமிழ்நாட்டின் முதலமைச்சராக தளபதி அவர்கள் ஆட்சி பொறுப்பேற்று இன்றோடு 8 முறை தொழிற்சங்க பிரதிநிதிகளை அழைத்து பேசி இன்று முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி, பின்வருமாறு அறிவிக்கப்படுகிறது.

ஊழியர்களுக்கும், அலுவலர்களுக்கும் 01.12.2019ம் நாளன்று பெறும் ஊதியத்தில் ஆறு சதவிகிதம் (6%) ஊதிய உயர்வு.

01.12.2019ம் நாளன்று, 10 வருடங்கள் பணி முடித்த ஊழியர்களுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் பணி பலனாக (Service Weightage) 01.12.2019ம் நாளன்று பெறும் ஊதியத்தில் 3 சதவிகிதம் (3%) ஊதிய உயர்வு.

ஊதிய உயர்வின் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ.527.08/ கோடி கூடுதல் செலவாகும்.

இவ்வூதிய உயர்வு மூலம் ஏற்படும் நிலுவைத் தொகை 01.12.2019ம் நாள் முதல் கருத்தியலாகக் (Notional) கணக்கிட்டு 01.04.2022ம் நாள் முதல் பணப் பலன்கள் வழங்கவும், 01.04.2022 முதல் 31.05.2023 வரை வழங்கப்படவேண்டிய நிலுவை தொகையினை இரண்டு தவணைகளாக வழங்கவும் முடிவு செய்து அறிவிக்கப்பட்டுள்ளது. மொத்த நிலுவைத் தொகை ரூ.516.71/ கோடி.

மேலும் 01.12.2019 முதல் 31.03.2022 வரையிலான 28 மாதத்திற்கான நிலுவைத் தொகையில் ஒவ்வொரு பணியாளருக்கும் குறைந்தபட்சம் தொகுக்கப்பட்ட நிலுவைத் தொகையாக ரூ.500/ வீதம் கணக்கிட்டு இந்நிலுவைத் தொகையினை மேற்குறிப்பிட்டவாறு இரு தவணைகளாக வழங்கப்படும். இதற்காக ரூ.106 கோடி கூடுதல் செலவாகும்.

ஊதிய உயர்வின் மூலம் பயன்பெறும் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை 75,978. 10 வருடங்கள் பணி முடித்த ஊழியர்களுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் பணி பலனாக (Service Weightage) 3 சதவிகிதம் (3%) ஊதிய உயர்வு மூலம் பயன்பெறும் பணியாளர்களின் எண்ணிக்கை 62,548.

வேலைப்பளு குறித்த ஒப்பந்தம் தொழிற்ச்சங்கங்களுடன் பின்னர் பேசி முடிவு எடுக்கப்படும். மேற்காணும் முடிவினை அனைத்து தொழிற்சங்கங்களும் மனமகிழ்ச்சியுடன் ஏற்று, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

இவ்வாறு அமைச்சர் செந்தில்பாலாஜி தெரிவித்தார்.




நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் மேற்கு நகரம் சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் நாமக்கல் உழவர்சந்தை அருகில் நடைபெற்றது. இதில், நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், நகரச் செயலாளர்கள் தெற்கு ராணா ஆர்.ஆனந்த், கிழக்கு செ.பூபதி, மேற்கு சிவக்குமார், நகர மன்றத் தலைவர் து.கலாநிதி மற்றும் நகரக் கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள், வார்டுச் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.5.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் திருவாரூர், திண்டுக்கல், தருமபுரி, நீலகிரி, நாமக்கல், கன்னியாகுமரி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் 30 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகக் கட்டடம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் (பயிற்சி) / முதன்மைச் செயலாளர் ஹர் சஹாய் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் மரு. தாரேஸ் அஹமது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் எம். கருணாகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தியாகிகள் - மேதைகளைப் பெருமைப்படுத்த சிலைகள் - நினைவுச் சின்னம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!... முதல் பக்கத் தொடர்ச்சி

அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பை பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னம் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**திராவிட இயக்கத்தின் அரசியல் முன்னோடி!**

அந்த வகையில், சுதந்திர போராட்ட வீரர் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 150வது பிறந்தநாள் விழாவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 3.9.2021 அன்று சட்டப்பேரவையில், தனது வாழ்நாளின் முக்கிய நாட்களைக் கோவைச் சிறையில் கழித்த வ.உ. சிதம்பரனார் அவர்களுடைய முழு உருவச் சிலை கோயம்புத்தூர் வ.உ.சி. பூங்காவில் அமைக்கப்படும் என்றும், 2021-22ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிக்கையில், பெண் சமூகச் சீர்திருத்தவாதி, எழுத்தாளர், தேவதாசி ஒழிப்பு இயக்கம் மற்றும் திராவிட இயக்கத்தின் அரசியல் முன்னோடியுமான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு மயிலாடுதுறையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்றும், இந்தியாவின் முதல் பெண் சட்டப்பேரவை உறுப்பினர், இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர், தமிழ்நாட்டின் சமூக சீர்திருத்தப் பெண் மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கு புதுக்கோட்டையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களுக்கு கோயம்புத்தூர் வ.உ.சிதம்பரனார் பூங்காவில் 40 இலட்சம் ரூபாய் செலவிலும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு மயிலாடுதுறையில் உள்ள வரதாச்சாரியார் பூங்காவில் 16 இலட்சம் ரூபாய் செலவிலும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் 10 இலட்சம் ரூபாய் செலவிலும் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

**கொங்கு மண்டல தியாகி!**

2021-22ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிக்கையில், கொங்கு மண்டலத்தில் சுமார் இரண்டு இலட்சம் ஏக்கர் பாசன வசதி பெறும் நீர்ப்பாசனத் திட்டமான கீழ்பவானி பாசனத் திட்டம் கொண்டுவர முக்கியக் காரணகர்த்தாவாக இருந்த ஈரோடு தொகுதியின் சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும், சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று சுமார் 11 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த உத்தமத் தியாகி திரு. ஈஸ்வரன் அவர்களது நினைவைப் போற்றும் வகையில் ஈரோடு மாவட்டத்தில் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம் அமைக்கப்படும் என்றும், தமிழுக்கும், தமிழக மக்களுக்கும் அயராது உழைத்தவரும், சமூகநீதிக் கோட்பாடுகளுக்காகச் சட்டவடிவம் கொடுத்தவருமான, சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களது சேவைகளை நினைவுகூரும் வகையில், அன்னாருக்கு நாமக்கல் நகரில் அரங்கம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

**முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன்!**

அதன்படி, உத்தமத் தியாகி ஈஸ்வரன் அவர்களுக்கு ஈரோடு மாவட்டம், பவானி சாகர், முடுக்கன்துறையில் 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுக்கு நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் வட்டாரம், நவணிதோட்டக் கூர்பட்டியில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்படவுள்ள திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டினார்.

**விழாவில் பங்கேற்றோர்!**

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயலகத்திலிருந்து, சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த. மோகன், ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், காணொலிக் காட்சி வாயிலாக மயிலாடுதுறையிலிருந்து சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் நிவேதா எம். முருகன், எம். பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கோயம்புத்தூரிலிருந்து கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மு. பிரதாப், கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி கல்பனா ஆனந்தகுமார், வ.உ.சி. அவர்களின் பேத்தி திருமதி மரகத மீனாட்சி ராஜா, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், புதுக்கோட்டையிலிருந்து சட்டமன்ற உறுப்பினர் வி. முத்துராஜா, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கவிதா ராமு, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 4**

75 சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

ம.அ.4.ந.க.எண்.பி3/0855/2023

**E - ஒப்பந்தப்புள்ளிகள்**

மண்டலம் - 4ல் ஐந்து பணிக்கு மண்டல அலுவலர் - 4 அவர்களால் ஒப்பந்தம் வரவேற்கப்படுகின்றது.

மண்டலம் - 4, பகுதி - 09, வார்டு - 34 முதல் 36 வரை உள்ள பல்வேறு பூங்காக்களை ஆண்டு பராமரிக்கும் பணி - பணிக்கான மதிப்பு - தோராயத் தொகை - குறைந்தபட்சம் **ரூ.18.11 இலட்சம் முதல் ரூ.89.50 இலட்சம் வரை மட்டும்.**

ஒப்பந்ததாரர்கள் **https://tntenders.gov.in** என்ற இணைய தளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். ஒப்பம் பதிவேற்றம் செய்யும் நாள் மற்றும் நேரம் - **25.05.2023** அன்று மாலை **3.00** மணி வரை, ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **26.05.2023** அன்று மாலை **3.30** மணிக்குள் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 2516 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**மண்டல அலுவலர் -4**

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்




சென்னை, தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி செந்தில் பாலாஜி தலைமையில், நேற்று முன்தினம் (10.05.2023) மின் வாரிய தொழிற் சங்கங்களுடன் ஊதிய விகித உயர்வு தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்றது. உடன் கூடுதல் தலைமைச் செயலாளர்/ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, மேலாண்மை இயக்குநர் ரா.மணிவண்ணன், இயக்குநர்(பகிர்மானம் மா.சிவலிங்கராஜன், செயலாளர் ஆ.மணிக்கண்ணன், உயர் அலுவலர்கள் மற்றும் மின் வாரிய தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளனர்.